

குறள் நெறி ஓங்கின் ! குடியரசு ஓங்கும் !!

# இலக்குவனார்



இலக்குவனார் இலக்கியப்பேரவை வெளியீடு (பெப்ருவரி 2007)


## பேராசிரியர் சி.இலக்குவனார் பற்றிய அறிமுகம்

இலக்குவ னாரா? இவர்யார் எனநீர்
வினவுதி ராயின் விடையிறுப் பேன்யான்
**சங்கத் தமிழை வங்கக் கடலில்**
எறிவோம் என்றே எள்ளிய வர்க்கு
**சங்கத் தமிழ்பாடித் தமிழர்புகழ் வளர்ப்ப** மென்று
சிங்க முழக்கமிட்டுச் செயலில் காட்டியவர்;
ஆசிரியப் பணியோடுஅன்னைத் தமிழ்ப்பணியும்
அமைந்ததே தம்வாழ்வின் அரிய பணியென்று
அலையலையாய் வந்தபல எதிர்ப்புகளைத்
தம்செயலால்
**உலையெரிமுன் தூசுபோல்** ஊதிவென்ற
உரமுடையோர்;
மொழிப்போரில் மூன்றுதிங்கள் தன்னுடனே
இருப்பதற்கு
**சிறையே தவம்செய்த** சீமான்; அவர்தாம்நம்
செந்தமிழ்க் காவலர் **சி. இலக்குவ னாராம்**!

*புலவர் உ.தேவதாசு*

*சலுகை போனால் போகட்டும் - என்*
*அலுவல் போனால் போகட்டும்*
*தலைமுறை ஒருகோடி கண்ட - என்*
*"தமிழ்" விடுதலை ஆகட்டும்*

என்ற புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனாரின், பாட்டு இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்த நம் இலக்குவனார், தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டத்திலுள்ள **'வாய்மேடு'** என்னும் சிற்றூரில், சிங்காரவேலருக்கும்,இரத்தினம் அம்மையாருக்கும் 17.11.1910 ஆம் ஆண்டு பிறந்தார். அங்கேயே, திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தொடக்கக் கல்வி கற்றார்.

'இராசாமடம்' என்னும் ஊரில் நடுநிலைக் கல்வி கற்றார். **'தமிழர் தலைவர்'** என்று பெரியாரைப் பற்றி நூல் எழுதிய **'அறிஞர் சாமி சிதம்பரனார்'** இவருக்கு ஆசிரியராவார். 'ஒரத்தநாட்டில்' உயர்கல்வி முடித்துவிட்டு 'திருவையாறு அரசர் கல்லூரியில்' புலவர் பட்டம் பெற்றார். கரந்தைக் கவியரசு **அரங்க வேங்கடாசலம் பிள்ளை**, இவருடைய பேராசிரியப் பெருமக்களுள் ஒருவராவார். பிற்காலத்தில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்த **அன்பு கணபதி** அவர்கள், இவரோடு உடன்பயின்றவராவார்.

### கல்லூரிக் கல்வியும் பட்டமும் :

1936இல் திருவாரூர்கழக உயர்நிலைப் பள்ளியில், தமிழாசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார். படிப்படியாக உயர்கல்வி பெற்று பி.ஓ.எல்; எம்.ஏ ஆகிய இருபட்டங்களையும் பெற்றார். **'தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and Growth of Tamil Language)**என்னும் தலைப்பில் **ஆங்கிலத்தில் ஆய்வுக் கட்டுரை** எழுதி எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார்.

அகவை அய்ம்பதைத் தாண்டிய பிறகும், அயர்வின்றி உழைத்து **'தொல்காப்பியம்' முழுமையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, ஆராய்ச்சிக்கு முன்னுரையும் விரிவாக எழுதி, முனைவர் பட்டமும் பெற்றார்.**

### தமிழ்ப்பணியாற்றிய இடங்கள் :

திருவாரூர் உயர்நிலைப்பள்ளி, தஞ்சை மாவட்ட கழகப் பள்ளிகள், திருவையாறு அரசர் கல்லூரி, திருநெல்வேலி தாயுமானவர் இந்துக் கல்லூரி, விருதுநகர் செந்தில் குமார நாடார் கல்லூரி, திருவெறும்பியூர் முக்குலத்தோர் உயர்நிலைப்பள்ளி, ஈரோடு மகாசனக் கல்லூரி, நாகர்கோயில் தெ.தி.இந்துக் கல்லூரி போன்ற இடங்களில், பேராசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றியதோடு, **ஊர்கள்தோறும் நடையாய்** நடந்து மக்களுக்குத் **தமிழுணர்வை ஊட்டினார்.**

மதுரை, தியாகராசர் கல்லூரியில் ஆறு ஆண்டுகள், தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியபொழுது, **'தமிழ்க் காப்புக் கழகம்'** தொடங்கி, மக்களிடையே, விழிப்புணர்வை ஊட்டினார்.

தமிழ்க் காப்புக் கழகத்தின் முதல் கூட்டத்தில், அன்றைய கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வரும், பிற்காலத்தில், சென்னை பெரியார் அஞ்சல்வழிக் கல்லூரியின்முதல்வராக இருந்துஅரும்பணியாற்றியவருமான பெரியார் பேருரையாளர், பெரும்புலவர். பேராசிரியர் **ந. இராமநாதன்** அவர்கள் **'கவிஞன் உள்ளம்'** என்றதலைப்பில் சிறப்புரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

**'வணிகவிளம்பரப்பலகைகள், செய்தித்தாள்கள்** போன்றவைகள், **தூயதமிழில்** இருக்க வேண்டுமென, இத்தமிழ்க் காப்புக் கழகம் மூலம் போராட்டம் நடத்தினார்.

**1965 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடை பெற்ற 'இந்தி எதிர்ப்புப் போரில்' ஈடுபட்டதால்,** அன்றைய அரசின் அடக்குமுறையால், **'இந்திய பாதுகாப்புச் சட்டப்படி' (Defence of Indian Rules) சிறைத் தண்டனை பெற்றார்.**

**'இந்திய மண்ணில், ஒரு மொழிக்காக, மொழிப் பேராசிரியர் ஒருவர் சிறை சென்றது வரலாற்று நிகழ்வாகும்,** மூன்று திங்கள் சிறைத் தண்டனை பெற்றதுடன் அதற்காகப் பேராசிரியர் பதவியையும் இழந்தார். 1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆட்சிப் பொறுப்பை





*செல்வமெனப் போற்று*
*செந்தமிழ்ச் சொல்லை* - **பாவேந்தர் பாரதிதாசன்**

ஏற்றதும், சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியராக இலக்குவனார், பேரறிஞர் அண்ணா அவர்களால், மீண்டும் பணி அமர்த்தப்பட்டார்.

**துணிவாற்றலுக்கு ஓர் இலக்குவனார்:**

அண்ணாவின் மறைவிற்குப்பின், ஐதராபாத்தில் உள்ள 'உசுமானியாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். அதன்பின் நாகர்கோயில் தெ.தி. இந்துக் கல்லூரி முதல்வராகி, ஓய்வு பெற்றார்.

**தமிழியக்கப்பணிகளும், இதழ்களும்:**

ஆசிரியப்பணியைத் தொடங்கியதும், பள்ளியில் **'தொல்காப்பியத் திருநாள்'** முதன்முதலில் கொண்டாடினார்.

திருவையாறு அரசர் கல்லூரியில் பணியாற்றிய பொழுது, தொல்காப்பிய விழாவோடு, **திருவள்ளுவர் விழா, இளங்கோவடிகள் விழா** போன்ற விழாக்களைக் கொண்டாடி, தமிழுணர்வை ஊட்டினார்.

விருதுநகர் செந்தில் குமார நாடார் கல்லூரியில் பணியாற்றிய பொழுது **ஔவையார் விழாவையும், தமிழ் மறுமலர்ச்சி நாள் விழாவையும்** கொண்டாடி, அப்பகுதியில் தமிழுணர்வை ஏற்படுத்தினார்.

**'கல்வி மொழியாகவும் கடவுள் வழிபாட்டு மொழியாகவும், அரசாள் மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் தமிழ் ஆகும் நாளே, அது மீண்டும் மலர்ச்சி பெற்ற நாளாகும்'** என்ற அவர்தம் மொழிக் கொள்கையை, தமிழ் மறுமலர்ச்சி நாள் விழாவில் வலியுறுத்தினார்.

விழாக்கள் மூலமாகத் தமிழுணர்வை ஏற்படுத்தியது மட்டுமன்றி, **'சங்க இலக்கியம்' 'இலக்கியம்' 'திராவிடக் கூட்டரசு' 'குறள் நெறி'** போன்ற இதழ்களை, தொகை இழப்போடு நடத்தி, தமிழ்வாழத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

**துணிவாற்றலுக்கு ஓர் இலக்குவனார்:**

பணியில் இருந்து கொண்டே **1938 இல் சென்னை 'ஒற்றைவாடை' ' இந்தி எதிர்ப்பு மாநாட்டில்' தந்தை பெரியாருடன் மேடை ஏறி, தமிழ் முழக்கமிட்டார்.**

**'வகுப்புவாரி உரிமை மாநாட்டில்' பெரியாரோடு கலந்து கொண்டு உரிமை முழக்கமிட்டார்.**

அமெரிக்காவில் 'இன வெறிக்கு எதிராக' **மார்ட்டின் லூதர் கிங்,** நடத்திய " Civil Rights March" என்பதைப் பின்பற்றி, **'தமிழ் உரிமைப் பெருநடைப்பயணம்** " Tamil Rights March" மேற்கொண்ட தனிப்பெரும் பேராசிரியர் இவரே!

**" மொழிகாக்க வீதிக்கு வந்த முதல் பேராசிரியரும் இவரே"**

சிறை சென்ற செம்மல், பேராசிரியர் இலக்குவனாரின் விடுதலைக்காக **முப்பத்தேழு வழக்குரைஞர்கள் வாதாடிய நிகழ்ச்சி, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும்.**

**உலகப் புகழ்:**

பேரறிஞர் அண்ணா, அமெரிக்காவின் **'யேல் பல்கலைக்கழகத்திற்குச்** சென்ற போது, இலக்குவனாரின்,ஆங்கிலத் தொல்காப்பியத்தையும், ஜி.யு.போப் அவர்களின் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலையும், உடன் எடுத்துச் சென்று, அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கும், போப் ஆண்டவருக்கும் அன்பளிப்பாக வழங்கி, இலக்குவனார்க்கு உலகப் புகழ் சேர்த்த பாங்கினைத் தமிழர்கள் மறந்து விட முடியுமா?

வறுமை வாட்டினாலும், வானம் பாடியாய் வாழ முடியும், வையகம் போற்றும் வளக்கொடைகள் வழங்க முடியும் என்பதை, நேர்நின்று உணர்த்தி, நிமிரச் செய்யும் வரலாறு, பேராசிரியர் இலக்குவனாரின் வரலாறு என்பது வெள்ளிடைமலை , தமிழும் தமிழர் முன்னேற்றமுமே தம்மூச்சாகவும் பேச்சாகவும் செயலாகவும் வாழ்ந்த இலக்குவனார் 3.9.1973-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

தமிழுக்கும், தமிழருக்கும் எழுச்சியையும், ஏற்றத்தையும் தரும் இந்நாளில், முனைவர் பேராசிரியர் இலக்குவனாரின் வழியைப் பின்பற்றித் தமிழ் வளர்த்து உயர்வோம். தலைநிமிர்ந்து வாழ்வோம்.

---

# "மலராதோ நினைவுகள்"

*புலவர் . உ. தேவதாசு*

ஓ! இந்தக் காலத்தின் மாயந்தான் என்னே! கல்வி கற்க, இருபத்தைந்து ஆண்டுகளை விழுங்கியதோடு மட்டுமின்றி, முப்பத்தைந்து ஆண்டுகள் முழுதாய்ப் பணியாற்றியதால், எத்தனை இடங்களில், கால்பதிக்கச் செய்தது. இப்பெரியவரை அத்தனையும் காலம் செய்த மாயந்தானே!

இவரின் பணித்திறன் கண்ட, தனியார் நிறுவனம், ஒன்று, மேலும் பத்துப் பதினைந்து ஆண்டுகளை விழுங்கிக் கொண்டது. இப்பொழுது பணி செய்து, பழுத்த பழமாய், தான் பிறந்த மண்ணை, சின்னஞ்சிறுவனாய், ஆடி ஓடிப் பாடித்திரிந்த தன் சொந்த ஊரைக்காண, தன் கொள்ளுப் பேரனுடன் வருகிறார்.

இப்பொழுது, தன் கொள்ளுப் பேரனுக்கு, அன்றைக்குத் தன் ஊரில் ஆடிப்பாடித் திரிந்த இவர் வயதுதான். பேருந்திலிருந்து தாத்தாவும் பேரனும் இறங்குகின்றனர். பணி செய்து பழுத்தபழமாய், தொண்டுகிழமாய், தளர்நடை தண்டூன்றி யவராய், தன் ஊருக்குச் செல்லும், தார்ச்சாலையில் பேரனுடன் நடக்கத் தொடங்குகிறார். இந்த நிறுத்தத்திலிருந்து, அரைக்கிலோ மீட்டர் தொலைவு நடந்து செல்லவேண்டும் அவரது ஊருக்கு, பெரியவர், தன் பேரனை விளித்து, தம்பீ, இதுதான் உன் தாத்தா ஊருக்குச் செல்லும் சாலை. எனக்கு, உன் வயதிருக்கும்பொழுது, இது வண்டிப் பாதையாக இருந்தது, என்று தன் மலரும் நினைவுகளை பின் நோக்கி அசைபோடுகிறார்.



எப்படியெல்லாம் எங்கள் இளம் பருவத்தைக் கழித்தோம் தெரியுமா? இப்பொழுதும் எனக்குப் பசுமையாக, என் நினைவில் இருக்கிறது, பளிச்சென விடிந்ததும், நாங்கள் ஆறேழு பேர், சிறுவர் சிறுமியர், பெரியதிடலில் ஒன்றாய்க் கூடுவோம். அதோ தெரிகிறதே மணல்திட்டு. அங்குபோய் மண்ணைச் சேர்த்து தண்ணீரில் குழைத்து, அழகாக மண்பொம்மை செய்வர் சிறுமியர். நாங்கள் பக்கத்தில் பூத்திருக்கும் பூக்களைப் பறித்து வந்து, அந்தச்சிறுமியரிடம் கொடுப்போம். அவர்கள், அப்பூக்களைத் தொடுத்துபொம்மைகளுக்குச் சூட்டி,

அழகுபார்க்க, மகிழ்ந்து விளையாடுவோம். பின்பு பொருள் விளங்காத, அந்தக் கல்லாத வயதில், அப்பா, அம்மா விளையாட்டு விளையாடுவோம்.

அந்த விளையாட்டு முடிந்ததும், அருகில் அமைந்திருக்கும், நீர் நிறைந்த குளத்தில், சிறுமியரோடு கைகோத்தும், கட்டிப்பிடித்தும், முக்குளித்தும், நீருக்குள் நீந்தியும், விளையாடுவதில் நேரம் போவதே தெரியாது. இப்பொழுது, சிறிது தண்ணீரே உள்ள இக்குளம், அந்தக் காலத்தில், எப்பொழுதும், நீர் நிறைந்தே காணப்படும். தண்ணீர் எப்பொழுதும், கரையைத் தொட்டுக் கொண்டிருக்கும். காற்றில், சிற்றலைகள், சீராக வந்து, கரையை, நுரையோடு தொட்டுச் செல்லும்.

ஓய்வாகச் சிலர், குளக்கரையில் இருக்கும் மர நிழலில் அமர்ந்து, இதமான காற்றையும், அலைகளின் அழகையும், சுவைத்துக் கொண்டிருப்பர். ஆண்கள் பெண்கள் தனித்தனியாகக் குளிப்பதற்குரிய படித்துறைகள். படித்துறைக் கரையில், மிகப்பருத்த **'மருதமரம்'** ஒன்றிருக்கும். அது, **'திருமலை நாயக்கர் மகாலை'** நினைவுபடுத்துவது போலிருக்கும். அம்மருத மரத்தின் ஒரு பெரிய கிளை, வளைந்து, நெளிந்து, குளத்தின் கால்பகுதிவரை நீண்டு, தண்ணீரைத் தொடும் படி தாழ்ந்து அமைந்திருக்கும்.

தம்பி! அந்த நீர் விளையாட்டு முடிந்தவுடன், இங்கு மரத்தின் கிளையிலிருந்து, தடாலென நீருக்குள், குதித்துக் குதித்து, விளையாடுவதில்தான், எத்தனை மகிழ்ச்சி. ஒவ்வொருவராகவும், சேர்ந்தும்,

மருதமரக்கிளையிலிருந்து பாய்ந்து நீருக்குள் குதிப்பதால் ஏற்படும் வட்டமான நீர்த் திவலைக்காட்சிகளையும், நீருக்குள் பாய்ந்து, நேரடியாக மூச்சடக்கி, தரையின் கீழிருக்கும் மணலை, ஒற்றைக் கையில் எடுத்து, தன்தலை தெரியுமுன், கைமணல் காண்பித்து, களிப்புறும் காட்சியையும், கரையிலிருப்பவர்கள் வேடிக்கை பார்த்திருப்பர். தொடரும் எங்களின் அமர்க்களம் அங்கிருக்கும் பெரியவர்களால், கட்டுப் படுத்தப்பட, ஒரு வழியாகக் கண்சிவந்த நிலையில் கரையேறுவோம் என்று கூறி முடித்த பெரியவர், இவைகள் யாவும், நாங்கள் பள்ளி செல்லாத சின்னஞ்சிறு பருவத்தின், கல்லா இளமைக் கவின்மிகு காட்சிகள்.

இனி, அந்தக் கள்ளங்கபடமற்ற, துள்ளித்திரியும் இளமைப்பருவம் திரும்ப வருமா? என்ற ஏக்கப் பெரு மூச்சுடன், இன்று இயற்கையழகு சிதைந்த தன்சிற்றூர் நிகழ்வை எண்ணிப் பார்க்கின்றார், அந்தப் பெரியவர் எவ்வளவோ தம் இளமைக் கால நிகழ்ச்சிகளைத் தன் கொள்ளுப்பேரனுக்குச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறார். தொடர்ச்சியாகப் பேச முடியவில்லை. காரணம், நடுக்கமும் தளர்ச்சியும் உடைய முதுமை. ஒரு சொல் சொல்வதற்குள் 'லொக் லொக்கென இருமல்' மீண்டும் அமைதி. ஓ! என் இளமையே, நீ! இரக்கத்துக்குரியை! நீ எங்கே இருக்கிறாய்?

மேற்சொன்ன அந்தப் பெரியவர் வேறு யாருமல்லர் **'தொடித்தலை விழுத்தண்டினார்'** என்ற **'புறநானூற்றுப்' புலவர்தான்.** கழிந்த இளமையை இருப்பவர்க்குச் சொன்ன பாடலவரிகளின் தொகுப்புதான் மேற்சொன்ன செய்திகள் இப்பாடலைப் படித்தால், நம் ஒவ்வொருவரின் இளமை நினைவுகள் உள்ளத்தில் ஊஞ்சலாடுமன்றோ! இப்பாடல், நினைவுகளை மலர்த்தும் அரிய சஞ்சீவி அல்லவா? உண்மைதானே!

*இதோ அந்த சங்கப்பாடல்*

*இனி நினைந்து இரக்கம் ஆகின்று; திணிமணல்*
*செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்*
*தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து*
*தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி*
*மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு*
*உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து*
*நீர்நணிப் படிகோடு ஏறிச் சீர்மிக*
*கரையவர் மருளத் திரையகம் பிதிர*
*நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து*
*குளித்து மணல்கொண்ட கல்லா இளமை*
*அளிதோ தானே! யாண்டுண்டு கொல்லோ!*
*தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று*
*இருமிடை மிடைந்த சிலசொல்*
*பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே*

*புறம் 243*

---

**வீ**ட்டுச் சமையல் போன்றது தமிழ். அது கலப்பின்றித் தூய்மையுடன் அமைந்துள்ளது. குடுகுடுப்பைக்காரன் பிச்சை எடுத்தசோறு பலவகையாகக் கூட்டுச் சோறாக இருப்பதைப் போன்றது ஆங்கிலம் ஆகும். இலத்தீன் கிரிக்கு முதலிய மொழிச் சொற்களின் கலப்பே ஆங்கிலம். அதுபோலத் தமிழ் மொழியையும் கலப்பு மொழியாக்க இயலாது. உரையாடலில் 'லௌட ஸ்பீக்கர்' 'ரிடைர்டு' என்பன போன்ற ஆங்கில மொழிச் சொற்களைக் கலந்து பேசுகின்றனர். அவற்றிற்குப் பதிலாக **'ஒலிபெருக்கி', 'ஓய்வு பெற்றவர்'** என்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினால் புரியாதா? வழக்கில் பேசுவனவற்றை எல்லாம் அப்படியே எழுத வேண்டியதில்லை. **பேச்சு வழக்குவேறு; எழுத்து வழக்கு வேறு, இரண்டிற்கும் வேறுபாடு என்றும் இருக்கும்.** அவ்வேறுபாட்டை நீக்க இயலாது.

**'திராவிடம்'** என்ற சொல்லில் இருந்து **'தமிழ்'** என்ற சொல், வந்ததாகக் கூறுவர். **'தொல்காப்பியத்தில்' 'தமிழ் என்கிளவியும் அதனோரற்றே'** எனத்தமிழ் என்ற சொல், பயன் படுத்தப்பட்டுள்ளது. **திராவிடம் என்ற சொல் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தான் பயன்பட்டுள்ளது.** எனவே, அக்கருத்துப் பொருந்தாது. பேரன், பாட்டனைப் பெற்றெடுத்தான் என்பது போன்றது அது'

*பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார்*
*(1971இல் பேசியது)*

# சொன்னார்கள்......

**உ**ருசிய நாட்டை உருவாக்கிய **'மாவீரர் இலெனின்'** அவர்களின் தாய்மொழிப் பற்றை எண்ணிப்பார்ப்போம்.

'நாம், உருசிய மொழியைக் கெடுக்கிறோம். தேவையின்றிப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். தேவையற்ற பிற மொழிச் சொற்கள் எனக்கு, எரிச்சல் ஊட்டுகின்றன. செய்தித்தாள்களில் எழுதுவோர் செய்யும் தவறுகள், என்னை, உண்மையாகவே சினமடையச் செய்கின்றன. உருசிய மொழிச் சிதைப்புக்கு எதிராகப் போர் தொடுக்க, இது உரிய நேரமல்லவா?

என்று கூறி, தாய் மொழி அழிப்பாளரை, எதிர்த்துப் போர் தொடுத்து, அழித்துவிட வேண்டும் என்றல்லவா, மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறார்.

மேற்சொன்னவரிகள் யாவும், இன்று நம் தமிழகத்தில், தாய்மொழியாம் தமிழ் மொழியின் நிலையை - அதை எந்தெந்த வகையில், குறிப்பாக மக்களிடம் விரைந்து சென்று சேரக்கூடிய பாதிப்பை விளைவிக்கக் கூடிய, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், செய்தித்தாள்கள் ஆகியவற்றின், தாய்மொழி அழிப்புச் செயலை, அப்படியே படம் பிடித்துக் காட்டுவதுபோல இல்லையா?

---

Tamil has a Vitality, a fertility adaptability and Versatility Unequalled by any other languange (Anna)

உயிர்வாழக் கூடிய திறம் உள்ளதாகவும், செழுமையுள்ளதாகவும், மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடிய திறன் பெற்றதாகவும், அதோடு, பலதுறையில் பயிலும் திறம் பெற்றதாகவும், மற்ற எந்த மொழிக்கும், ஒப்புமை இல்லாததாகவும் தமிழ் மொழி இருக்கிறது.

*பேரறிஞர் அண்ணா*

## "MY TAMIL STUDIES"

What the Tamils have done in the struggle, no other indian Community has done. So, I thought that, if for no other reason than to show my sincere gratefulness to them, I should seriously read their books. So, I spent the last month in attentively studying their language.

The more I studied the more I felt its beauties. It is an interesting and sweet language, and from what I read, I saw that the Tamils had in their midst, in the past and even now, many intelligent, clever and wise persons. Again if there is to be one Nation in India, those who live outside the Madras Presideny, must know TAMIL.

(From the Book Mahatma Ghandhi's Jail Experiences told by Himself first Publiished by Tagore & co Madras 1922, South African Struggle).

என் தமிழ்ப்படிப்பு
போராட்டத்தில் தமிழ் மக்கள் பங்கெடுத்துக் கொண்டதைப் போல, வேறு எந்த இந்திய சமூகமும் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. எனவே, வேறு எந்தக் காரணத்திற்காக இல்லாவிட்டாலும், அவர்களுக்கு, என்மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கேனும், அவர்களுடைய நூல்களை நான் கருத்தூன்றி வாசிக்க வேண்டும் என்று எண்ணினேன். ஆகவே, அவர்களுடைய மொழியைக் கவனமாகக் கற்பதில், கடைசி மாதத்தைச் செலவிட்டேன். கற்கக் கற்க அதன் அழகுகளை, மேன்மேலும் நான் உணரலானேன். அது, சுவையும், இனிமையும் நிறைந்த ஒருமொழி. நான் படித்தவரையில், தமிழர்களிடையே, மதி நுட்பமும், அறிவுத் திறனும், விவேகமும் கொண்டவர்கள் பலர், முன்பு இருந்திருக்கிறார்கள். இப்பொழுதும் இருக்கிறார்கள் என்பதைக் கண்டேன். இந்தியாவில் அனைவரும், ஓரின மக்களாக வாழவேண்டும் என்றால், சென்னை மாநிலத்திற்கு வெளியே வாழ்கிறவர்கள், தமிழை அவசியம் கற்றாக வேண்டும் என்று கூறுவேன்.

(1922ல் சென்னை தாகூர் அண்டுகோ முதற்பதிப்பாக வெளியிட்ட, மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அனுபவங்கள் என்ற நாலிலிருந்து அவரே கூறியவை)

*நன்றி : 11-04-1969 'வாசகர் வட்டம்' 2-வது ஆண்டுமலர்*

## பேரவைச் செய்திகள்

இலக்குவனார் இலக்கியப் பேரவை' மொழிப் போர் வீரர் மருத்துவர் தி.பழநிச்சாமி அவர்கள் தலைமையில் 5-8-2006 சனிக்கிழமை மாலை, அம்பத்தூர் குமரன் திருமண மண்டபத்தில், பேராசிரியர் முனைவர் இலக்குவனாரின் மாணவரும், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் முதுபெரும் தலைவருமான, **மக்களின் மனிதர் தோழர் நல்லகண்ணு** அவர்களால், பேராசிரியர் இலக்குவனார் படத்திறப்போடு தொடங்கப் பெற்று, கற்றுத் துறைபோகிய பேராசிரியப் பெருமக்கள், முனைவர் கவிஞர் பொன் செல்வகணபதி, முனைவர் சுப. வீரபாண்டியன், சோகா இகெதா மகளிர் கலை அறிவியல் கல்லூரித் தாளாளர் கவிஞர் சேதுகுமணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க,

பேராசிரியர் இலக்குவனாரின் மக்கள், *பேராசிரியர் இ.மறைமலை, இ.திருவள்ளுவன்,* இ.திருவேலன், பேராசிரியர் முனைவர் கம்பம் சாகுல் அமீது உள்ளிட்ட சான்றோர் பெருமக்கள் வருகைதந்தும், பேரவைக்குப் பெருமை சேர்த்தனர்.

அதனைத் தொடர்ந்து, ஆர்வலர்களின் ஆதரவால் திங்கள் தோறும், **அம்பத்தூர் மகாகணேசா நடுநிலைப் பள்ளி வளாகத்தில், முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி** முதல் 12.00 மணிவரை **'திங்கள் ஒரு** திருக்குறள்' என்ற **தலைப்பில்,** செயலர் புலவர் **உ.தேவதாசு** அவர்களாலும், அடுத்து பல்வேறு அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவோடு, தொடர்கூட்டம் தொய்வின்றி நடத்தப்பட்டு வருகின்றன.

அறிமுகக் கூட்டம் 27-8-06 ஞாயிறு காலை அன்று மகாகணேசா நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் இ.திருப்பதி எம்.ஏ. எம்எட் அவர்கள் தலைமையில் **'வள்ளுவத்தில் வாழ்வியல் நெறி'** என்ற தலைப்பில் **புலவர் த. ஆறுமுகம்** அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்த நடைபெற்றது.

இரண்டாவது கூட்டம் 1-10-06 ஞாயிறு காலை திரு.கே. **இரஜுலா தேவி** பி.ஏ.பி.எட் அவர்கள் தலைமையில் **'தமிழர் மருத்துவம்'** என்ற தலைப்பில் மக்கள் நலமருத்துவர் தெ.வேலாயுதம் அவர்கள் சிறப்புரை ஆற்ற இனிதே முடிவுற்றது.

மூன்றாவது கூட்டம் 5-11-2006 ஞாயிறு அன்று தமிழ்த்தம்பி க. **பெருமாள்** அவர்கள் தலைமையில் **'திருக்குறளும் காப்பீடும்'** என்ற தலைப்பில், அம்பத்தூர் மண்டலப்பயிற்சி மைய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் பயிற்றுநர் சொ. **வினைதீர்த்தான்** பி.எஸ்ஸி அவர்கள் சிறப்புரை ஆற்ற சிறப்புடன் முடிந்தது.

நான்காவது கூட்டம் 3-12-06 ஞாயிறு அன்று இந்தியன் போஸ்ட் இதழாசிரியர் **த.அசோகன்** அவர்கள் தலைமையில் **'கண்டு கேட்டு உண்டு உயிர்த்தவை'** என்ற தலைப்பில் சோகா இகெதா மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தாளாளர் **கவிஞர் சேதுகுமணன்** அவர்களின் சிறப்புரையுடன் நிறைவுற்றது.

ஐந்தாவது கூட்டம் 7-1-07 ஞாயிறு அன்று தமிழ்நாடு டவுன் நியூஸ் பதிப்பாசிரியர் **மு.கதிரவன்** அவர்கள் தலைமையில் **'பல்லும் சொல்லும்'** என்ற தலைப்பில், சென்னை, தாய்மூகாம்பிகை பல் மருத்துவக் கல்லூரியின் கூடுதல் பேராசிரியர் **மருத்துவர் தாயப்பன்** அவர்கள் சிறப்புரையாற்ற சீரும் சிறப்புடன் முடிவெய்தியது.

அறிமுகக் கூட்டத்திற்கு இருபதுபேர் மட்டும் கலந்து கொண்ட இக்கூட்டம் சான்றோர்களின் அன்பாலும், ஆதரவாலும், வருகையாலும், ஏறத்தாழ ஐம்பதுபேர் கலந்துகொள்ளும் திங்கள் கூட்டமாகத் தொடர்வது, பேரவைப் பொறுப்பாளர்களாகிய எங்களுக்கு, மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் நல்குகிறது என்பதை நன்றியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பாராட்டுகிறோம்

*சாகித்திய அகெதெமி* பரிசு பெற்ற
கவிஞர் **மு.மேத்தா** அவர்களையும்,
தமிழக அரசின் *திரு.வி.க. விருது!*
பெற்ற எழுத்தாளர்
**க.திருநாவுக்கரசு**
அவர்களையும் பேரவை சார்பாகப்
பாராட்டுகிறோம்.

## "உயிர் எழுத்துகளை நினைவில் நிறுத்துவோம்"

*-கவிஞர் செம்பை சேவியர்*

**'அ**ம்மா' என்றே
சொல்வோமே!
அன்னைத் தமிழில்
அழைப்போமே!
**ஆ**யிரம் மொழிகள்
அறிவோமே!
அவரவர் 'தாய்மொழி'
கற்போமே!
**இ**ன்பம் இதனால்
வருமாமே!
இதுவே இயற்கை
உறவாமே!
**ஈ**கைப் பண்பில்
வளர்வோமே!
இதுதான் முன்னோர்
வழியாமே!
**உ**டுக்கை இழந்தவன்
கைபோல
உதவிட நாமும்
முயல்வோமே!
**ஊ**க்கம் கொண்டு
உயர்வோமே!
உலகோர் போற்ற
வாழ்வோமே!
**எ**தற்கும் அச்சம்
வேண்டாமே!
**ஏ**ன் எனக்கேள்வி
பயனாமே!
**ஐ**யன் வள்ளுவன்
வழியாமே!
அதுதான் நமக்குத்
துணையாமே!
**ஒ**ன்றாய் நாமும்
இணைவோமே!
நன்றாய் வாழ
முனைவோமே!
**ஓ**வியக் கலையைப்
பயில்வோமே!
உளத்தில் மகிழ்ச்சி
பெறுவோமே!
**ஔ** எனும் எழுத்தை
அறிவோமே!
அருங்குறட் பாக்களைச்
சுவைப்போமே!

தொடர்புக்கு :
*புலவர் உ.தேவதாசு*
செயலர்,
தொலைபேசி : 26582496
*கவிஞர் செம்பை சேவியர்*
ஒருங்கிணைப்பாளர்,
தொலைபேசி : 26582257